பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 16 | ஞாயிற்றுக்கிழமை | 30.03.2025 | அதிர்வு 237

பாதுகாப்பை மென்மேலும் உயர்த்த

## புதிதாகக் களமிறங்கும் சிறப்பு அதிரடிப் படை

(எஸ்.ஜினோதன்)



நாட்டில் சட்டவிரோதமான நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், பாதுகாப்பை 06▶

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 'ரஜ லுணு'

# ஆனையிறவு உப்பின் அடையாளப் பெயரை உறுதி செய்யுங்கள்!

## அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதி செய்யுமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திவுக்குக் கடிதம் ஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளார். 06▶



## 'ஆனையிறவு உப்பு' உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும்

அமைச்சர் சந்திரசேகர் உறுதி



ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது 06▶

## மோடி - தமிழர் தரப்பு சந்திப்பு; இன்னமும் முடிவு இல்லையாம்

காத்திருக்கின்றோம் என்கின்றார் சுமந்திரன்

"அடுத்த வாரம் இலங்கை வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கும்படி நாங்கள் தமிழரசுக் கட்சியினர் உட்பட தமிழர் தரப்பு பிரதிநிதிகள் கோரியிருக்கின்றோம். ஆனால், இன்னமும் சந்திப்புக்கு இணக்கம் தெரிவிக்கப்படவில்லை. சந்திப்பு நடக்குமா 06▶






நாட்டின் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் ஆகிய அமைச்சுகளைத் தம் வசம் வைத்திருக்கின்றார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க. நாடாளுமன்றத்தில் அரசு தரப்பில் சபை முதல்வரும் அவர்தான்.

இலங்கையின் மீதான சீன – இந்திய வல்லாதிக்கப் போட்டியில் சீனா பக்கம் சார்பெடுத்திருக்கும் அவரின் போக்கினால் வடக்கின் தமிழர்களுக்குத்தான் பெரும் பாதிப்பு ஏற்படும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

அண்மையில்தான் இலங்கை – சீன் நட்புறவுச் சங்கத்தின் தலைவராக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தேர்வாகி இருந்தார்.

அந்தப் பின்புலத்தில், கடந்த 21ஆம் திகதி வாரியப்பொலவில் இலங்கை விமான படை பயன்படுத்திய சீனத் தயாரிப்பு பயிற்சி விமானம் ஒன்று விழுந்து எரிந்து நாசமாகியது. விமானத்திலிருந்து விமானிகள் இருவரும் தங்களது இருக்கைகளை அழுத்தி மூலம் 06▶



# உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தலைவரைத் தவிர்ந்த பிற எம்.பிக்களைக் காணோம்

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

பிரதேசம் சார்ந்த பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்ட குறித்த கூட்டத்தில் யாழ்., கிளிநொச்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் பங்கேற்கவில்லை.

வழக்கம் போலவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமாகாண அவைத்தலைவருக்கான ஆசனங்கள் முன் வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அவர்கள் யாரும் இக்கூட்டத்தில் பங்கெடுத்திருக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பவானந்தராஜா –

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையான அழைப்பு விடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி, கலந்துகொள்ள முடியாமை தொடர்பாக அறிவித்தலை வழங்கியிருந்தார். ஏனைய எவரும் அறிவித்திருக்கவும் இல்லை, கலந்துகொள்ளவும் இல்லை. – எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் தெரிவித்த அவர் –

நீண்ட காலத்துக்கு பிறகு நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் என்பதால் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அவற்றுள் சில விடயங்களுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கப்பட்டாலும், சிலவற்றிற்கு சில காலம் தேவைப்படுவதால் அதிகாரிகளின் அறிக்கைகளை எதிர்பார்த்திருக்கின்றோம். குறித்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அவற்றுக்கான தீர்வுகளை வழங்க நடவடிக்கைகள் எடுப்போம். – என்றார்.



# மாணவியைத் தண்டித்த ஆசிரியரை பிணையில் விடுவித்தது நீதிமன்றம்



ஐந்தாம் வகுப்பு மாணவி ஒருவரை கண்டித்த விவகாரம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆசிரியரை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அந்த மாணவியின் பிழையான செயற்பாடு காரணமாக அவரை நல்வழிப்படுத்தும் வகையில் கண்டித்த ஆசிரியருக்கு எதிராக மாணவியின் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஆசிரியரை வியாழனன்று கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் பொலிஸ் காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

இதையடுத்து அந்த ஆசிரியரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பருத்தித்துறை பொலிசார் முற்படுத்தியிருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை, அந்த ஆசிரியரை ஆள் பிணையில் விடுவித்து உத்தரவிட்டமையுடன் வழக்கு விசாரணையை வரும் டிசம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்



## பிள்ளையார் சுழி போட்டு பிரச்சாரப் போரை ஆரம்பித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குரிய பிரச்சாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று ஆரம்பித்துள்ளது.

கொட்டகலை ஶ்ரீமுத்துவிநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகளின் பின்னர், தேர்தல் பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கூட்டம், கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும் நிதிச் செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், வேட்பாளர்கள் உட்படப் பலர் கலந்துக்கொண்டார்கள்.






# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்






# வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றி வரும் அநுர அரசு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

ஜனாதிபதி அநுர தலைமையிலான ஆளுந்தரப்பினர், வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த நாட்டு மக்கள் தமது ஆணையால் ஜனாதிபதியை நியமித்தும், 2/3 நாடாளுமன்ற அதிகாரத்தையும் வழங்கி தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பதிலையும் எதிர்பார்த்தாலும், இந்த அரசு எந்த வேலையும் செய்ய முடியாமல் பொய், தவறாக வழிநடத்துதல், ஏமாற்றுதல், பிரச்சினைகளைத் தவிர்ப்பது போன்றவற்றைத் தொடர்ந்து வருகின்றது.

மின்சாரம் தடைப்படுவதற்கும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கும் குரங்குகள் காரணமாம். நாய்களே சோறு உண்பதும், நாட்டு மக்கள் தேங்காய் சம்பலையும் சோற்றையும் அதிகமாக உண்பதுமே அரிசித் தட்டுப்பாட்டுக்கு காரணம் என இந்த அரச தரப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

உணவும் இந்த அரசுக்குப் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இவை பொறுப்பற்ற பேச்சுக்கள் ஆகும். இவை மக்கள் ஆணையை குறைமதிப்புக்குட்படுத்தும் பேச்சுக்களாகும்.

இவ்வாறு பொறுப்பற்ற சில்லறத்தனமான பதில்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். மூன்று வேளை போக, ஒரு வேளையும் சாப்பிட முடியாத மக்களும் காணப்படுகின்றனர். இது தவிர உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பொருட்களுக்கு மேலும் வரிக்கு மேல் வரி அறவிடுகின்றனர். மறுபுறத்தில் வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றி வருகின்றனர்.

கொரோனா காலகட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டனர். கல்வி அமைச்சுக்கு முன்பாக இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது, அவர்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களின் ஸ்தாபகர்களாக இருந்த தற்போதைய ஆளுந்தரப்பினர் இன்று ஆட்சிக்கு வந்தவுடன் இவற்றைத் தடை செய்ய முற்பட்டு வருகின்றனர். ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல் எழுப்புவதும் இப்போது தவறாகப் பார்க்கப்படுகின்றது.” – என்றார்.




# உள்ளூராட்சித் தேர்தலுக்கான செலவு வரையறை வெளியீடு

(எஸ்.ஜினோதன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒரு வேட்பாளர் எவ்வளவு பணத்தைச் செலவிடலாம் என்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொகுதிகளிலும் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.இதன்படி, ஒரு வாக்காளருக்காகச் செலவிடப்படக்கூடிய தொகை 74 ரூபா முதல் 160 ரூபா வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையில் வாக்காளர் ஒருவருக்கு 74 ரூபா செலவிடலாம் என்பதே குறைந்தபட்ச நிர்ணயமாகக் காணப்படுகின்றது.

தென்னிலங்கையைச் சேர்ந்த தொகுதியொன்றில் வாக்காளர் ஒருவருக்காக அதிகபட்சமாக 160 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.




# வேட்புமனுவில் போலிக் கையொப்பம்: விசாரணையை முன்னெடுக்கும் பொலிஸ்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுவில், ஒருவருடைய கையொப்பத்தைப் போலியாக வைத்த குற்றச்சாட்டில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த நபரின் கையொப்பமே இவ்வாறு போலியாக வைக்கப்பட்டுள்ளது.

அந்த நபர் தேர்தல் ஆணையத்துக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியேற்றித் தப்பி கொண்டனர். இந்த விபத்து தொடர்பில் முறையான விசாரணை கூட ஆரம்பிக்கப்பட முன்னர், விமானிகளின் தவறினால் ஏற்பட்ட விபத்து இது என்று அவசரப்பட்டு அறிவித்தார் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரான பிமல் ரத்நாயக்க.

சீனத் தயாரிப்பான இந்தப் பயிற்சி விமான ரகம் ஏற்கனவே பாகிஸ்தான், ஸிம்பாப்வே, சூடான் போன்ற நாடுகளில் தொழில்நுட்பக் கோளாறுகளால் விழுந்து நொறுங்கி, பல குற்றச்சாட்டுக்கள் தயாரிப்பு தொடர்பாக உள்ள பின்புலத்திலேயே, சீன நிறுவனத்தைக் காப்பாற்றுவதற்காக விழுந்தடித்து குற்றச்சாட்டை விமானப்படை விமானிகள் மீது சுமத்த முற்பட்டார் பிமல் ரத்நாயக்க என்று கூறப்படுகின்றது.

இப்போது காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் பயணிகள் சேவைகளை மேம்படுத்துவதற்காக பல உதவித் திட்டங்களை - கட்டுமான அபிவிருத்தி பணிகளை - நன்கொடையாக வழங்க இந்தியா முன் வந்து காத்திருக்கின்றது. ஆனால் விடயம் நகர்வதாக இல்லை.

இடையில் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமைச்சைக் கையில் வைத்திருக்கும் பிமல் ரத்நாயக்க நந்தியாக நடுவில் குந்தியிருந்து அபிவிருத்தி முயற்சிகள் முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போட்டு வருகின்றார் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்விவகாரம் இந்தியத் தரப்பையும் சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாக அறிய வருகின்றது.

இந்தியா வடக்குத் தமிழர்களுக்கு உதவ முன் வந்தாலும், அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு சிங்கள பேரினவாத தலைவர்கள் முட்டுக்கட்டை போட்டு நிற்கின்றார்கள் என்பதற்கு காங்கேசன்துறை, பலாலி மேம்படுத்தல் திட்டங்கள் முடங்கிப் போய் இருப்பது நல்ல சான்று.

சீனச் சார்பு போக்குக் கொண்ட ஒருவரின் கையில் வடக்கு அபிவிருத்தி தொடர்பான இந்திய உதவி திட்டம் சிக்குமானால் அது முடங்கிப் போய் நிற்பது தவிர்க்க முடியாததுதான்.

காங்கேசன்துறை துறைமுகமும் பலாலி சர்வதேச விமான நிலையமும் இப்போதைக்கு மேம்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. பொறுப்பு பிமல் ரத்நாயக்க கைகளில் இருந்து மாறினால்தான் இந்த இரு திட்டங்களும் சாத்தியமாகும் என்ற நிலைமைதான் இப்போது நீடிக்கின்றது.

## புதிதாகக் களமிற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மென்மேலும் உயர்த்துவதற்கும், உறுதி செய்வதற்கும் 500 சிறப்பு அதிரடிப் படையினர் களமிறங்கப் போகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தெற்கில் சமீபத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த 4 பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளோம். மேலும் அவ்வாறான விடயங்களைத் தவிர்க்கவே புதிய சிறப்பு அதிரடிப் படையினர் களமிறங்கப் போகின்றனர்.

புதிய சிறப்பு படையினர் தங்களது பயிற்சிகளை விரைவில் முடித்துவிட்டு தங்களது பணிகளுக்குத் திரும்புவார்கள்." - என்றார்.

## ஆனையிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத் தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938 ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் இன்று (நேற்று) முதல் (29) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், "ஆனையிறவு உப்பு" என்ற அடையாளப் பெயர் "ரஜ லுணு" என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழில் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும்.

அத்தகையதோர் கைத்தொழில் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும்போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் அரசின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 2025.03.18ஆம் திகதி, நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 22.7 இன் கீழ், ஆனையிறவு உப்பளம் குறித்து நாடாளுமன்றில் நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை "ஆனையிறவு உப்பு" என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதி செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

## 'ஆனையிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஆனையிறவு உப்பு" என்ற பெயருடன் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் சந்திரசேகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது தற்போது ரஜ என்ற பெயரிலேயே வெளிவருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்திலேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக அந்தப் பெயரை மாற்ற முடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன. உடனடியாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவே பழைய பெயரிலேயே விநியோகிக்கப்படுகின்றது.

வெகுவிரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆனையிறவு உப்பளத்தின் பெயரிலேயே இலங்கையில் மட்டும் அல்ல. உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும். இது தொடர்பில் தமக்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உத்தரவாதம் வழங்கியுள்ளார்." - என்றார்.

## மோடி - தமிழர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை. அந்தச் சூழ்நிலையில் தமிழர் தரப்பில் யார் சந்திப்பார்கள் என்ற கேள்விக்குப் பதில் அளிக்க முடியாது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரை அவர் உட்பட்ட தமிழர் தரப்பு பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவர் என்று வெளியான செய்தி தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சந்திப்புக்கான வாய்ப்பு கிடைக்குமா என்பது இதுவரை தெரியவில்லை. இந்திய அதிகாரிகள் இன்னும் தெளிவான பதில் எதனையும் எங்களுக்குத் தரவில்லை. சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்காத சூழ்நிலையில் அது பற்றி பேசுவது அர்த்தமற்றது." - என்றார் சுமந்திரன்.

# மோடியைக் காப்பது தங்களின் நோக்கம் அல்ல என்கிறார் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

## எமது வளத்தையும் மக்களையும் பாதுகாப்பதே இலக்காம்



இந்தியாவைக் காப்பாற்றுவதோ மோடியை காப்பாற்றுவதோ எமது நோக்கம் அல்ல. எமது வளத்தையும் மக்களையும் பாதுகாப்பதே எமது நோக்கமாக உள்ளது எனக் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் வருகை குறித்த கேள்விக்கு மேலும் பதிலளித்த அவர், மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி இந்தியப் பிரதமருடன் உரையாடலை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியப் பிரதமரின் வருகை வெறுமனே மீனவப் பிரச்சினைக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. இந்தியாவுக்கும் எமக்கும் எந்தவித பகையும் இல்லை. இந்திய மீனவர்களுக்கும் எமக்கும் எந்தவித கோபங்களும் இல்லை.

ஆனால் இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட ட்ரோலர்களைப் பயன்படுத்தி எங்களின் கடற்பரப்பில் கடற்றொழில் செய்வதையே எதிர்க்க வேண்டி உள்ளது.

உண்மையில் வடக்கில் உள்ள கடற்பரப்பை முற்றாக அழித்து ஒழிக்கும் நடவடிக்கையையே அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

இந்த நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களில் எமது கடல் பாலைவனமாக மாறுவதைத் தவிர்க்க முடியாது. இதனை யாரும் அனுமதிக்க முடியாது.

எனது வேலை இந்திய அரசாங்கத்தை பாதுகாப்பதோ, இந்தியத் தூதுவரைப் பாதுகாப்பதோ, இந்தியப் பிரதமரைப் பாதுகாப்பதோ அல்ல. எமது மீனவர்களைப் பாதுகாப்பதே. அந்த வேலையை சரிவர நான் செய்கின்றேன் என்று நான் நம்புகின்றேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# மியன்மாரில் நடந்த நிலநடுக்கப் பேரனர்த்தம்: எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கவலை தெரிவிப்பு

“மியன்மாரில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் ஏராளமான உயிர்கள் பலியாகியுள்ளன. ஏராளமான சொத்துக்களும் அழிந்துள்ளன. இந்த அவல நிலையை எதிர்கொண்ட மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“இந்த அனர்த்தத்தில் காணாமல்போன மக்கள் மற்றும் விலங்குகளின் உயிர்களைப் பாதுகாக்க உரிய தரப்புகளுக்கு இயலுமை கிட்டட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இம்மக்களுக்கு இயன்ற அதிகபட்ச உதவிகளையும், நிவாரணங்களையும், அவசர மனிதாபிமான மீட்பு நடவடிக்கைகளையும் பெற்றுக் கொடுக்குமாறு உலகின் செல்வந்த நாடுகளிடம் கௌரவத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.



# எந்த வழியூடாகவும் இராணுவத்தை தண்டிப்பதற்கு இடமளிக்கமாட்டோம்

## விமல் வீரவன்ஸ கொக்கரிப்பு



“படையினர் பெற்றுத் தந்த வெற்றியை நாம் மறக்கவில்லை. எனவே, உள்ளகப் பொறிமுறை ஊடாகவேனும் எமது இராணுவத்தைத் தண்டிப்பதற்கு இடமளிக்கமாட்டோம். பிரிட்டனின் அறிவிப்பு எதிராக கொழும்பில் நாளை திங்கட்கிழமை போராட்டம் இடம்பெறவுள்ளது.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“இனப்படுகொலை நடந்தது என்றும், படையினர் 40 ஆயிரம் பேரைக் கொலை செய்தனர் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறு படையினர் சட்டத்துக்குப் புறம்பாக 40 ஆயிரம் பேரைக் கொலை செய்தனர் என்றால் பெயர்ப் பட்டியல் எங்கே? வெளிநாடுகளில் உள்ளவர்களின் போலியான சாட்சியங்களின் அடிப்படையில் தகவல்களை வெளியிடுவதில் பயனில்லை.

இறுதிப் போரின்போது விடுதலைப்புலிகளிடமிருந்து 2 இலட்சத்து 97 ஆயிரத்து 853 பேரைப் படையினர் மீட்டனர். இது தொடர்பான பெயர்ப்பட்டியல் உள்ளது. ஆனால், ஆதாரம் இல்லாத 40 ஆயிரம் பற்றியே கதைக்கின்றனர். எனவே, இந்தப் பழிவாங்கலை சர்வதேசம் நிறுத்த வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேவை ஒரு தந்தை

தந்தை செல்வநாயகத்தின் 127ஆவது பிறந்த தினம் நாளை ஆகும். அதை ஒட்டிய ஜயந்தி தின நிகழ்வுகள் இன்று கிளிநொச்சியில் நடக்கின்றன.

சைவமும் தமிழும் ஓங்கி நிலை பெற்ற யாழ்ப்பாணத்தில் இருந்து, சைவர் அல்லாத ஒருவர் இனத்தின் தலைவராக - தந்தையாக - மிளிர்ந்து, உயர்ந்து போற்றப்படும் நிலைமை ஒன்றே அந்த மாமனிதரின் பெருமையை போற்றப் போதுமானதாகும்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைக்கான தளத்தை வடக்கு - கிழக்கு என்ற புவியியல் வரையறைக்குள் நெறிப்படுத்தி, தமிழ்த் தேசியமாக அதனை நிலை நிறுத்தியவர் தந்தை செல்வாதான்.

“ஏறத்தாழ 1950 களின் நடுக்கூறு வரை கணிசமான அளவு அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கையின் மார்க்சிய அரசியல் மரபின் பிரதான நிறுவனங்களில் ஏற்பட்ட அக, புறச் சிதைவின் பின்னர் செல்வநாயகத்தின் அரசியல் எண்ணத் துணிவு ஓர் அசாதாரண வலுவைப் பெற்றது” - என்று பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

மார்க்சிய அரசியல் மரபைப் பிளந்து கொண்டு, தமிழ்த் தேசியம் உருவெடுத்து உச்சம் பெறுவதற்கு வழி காட்டியவர் தந்தை செல்வா.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து - ஐம்பதுகளின் ஆரம்பத்திலிருந்து - தாம் மறையும் வரை கால் நூற்றாண்டுகளுக்கு மேல் ஈழத் தமிழ் தேசிய இனத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக அவர் விளங்கினார்.

ஆயினும், ஏனைய தமிழ்த் தலைவர்களில் இருந்து அவர் முக்கியமான ஒரு விடயத்தில் மாறுபடுகின்றார். அது, தலைவராகத் தம்மை யாரும் போற்றிப் புகழ்வதை அவர் விரும்பவில்லை என்பதுதான்.

1975 பெப்ரவரி 6 காங்கேசன்துறை இடைத்தேர்தலில் வெற்றியீட்டிய தந்தை செல்வாவைப் பாராட்டி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, கௌரவிக்க விரும்பினார்கள் இளைஞர்கள். அவர்களை அழைத்த செல்வா “தனிப்பட்ட எவரையும் நீங்கள் போற்ற வேண்டாம். நமது கட்சியை - நமது லட்சியங்களைப் போற்றுங்கள். புகழுங்கள். அவைதான் நிலையானவை. தனிப்பட்டவர்கள் நிலையானவர்கள் என்று கூற முடியாது” என வழக்கம் போல தணிந்த குரலில், ஒவ்வொரு சொல்லாக அழுத்தி உருத்துச் சொன்னார் தந்தை. வழக்கம் போல அவர் சொற்களில் உறுதி இருந்தது. ஆணித்தரம் இருந்தது. அவருக்குரிய விடாப்பிடியும் ஆழமாகப் பதிந்திருந்தது.

இந்த பண்பியல்பினால்தான் ஏனைய தமிழ் தலைவர்களினின்றும் அவர் வேறுபட்டு நிற்கின்றார். இன்றும், என்றும் தமிழினத்தின் தந்தை என்று அவர் போற்றப்படுகின்றார்.

தமிழினம் நடத்திய ஆயுதப் போராட்டமும், அதன் தலைமையும் வேறு பரிமாணங்களைக் கொண்டவை. அவை இராணுவக் கட்டமைப்பு ரீதியானவை. இப்போது அந்தப் போராட்ட தளத்திலிருந்து விலகி அகிம்சை வழிப் போராட்டத்தில் எங்கள் உரிமைகளை நாடிக் களமாட வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

இந்தச் சமயத்தில் ஈழத்து காந்தி எனப் போற்றப்படுகின்ற தந்தை செல்வா போன்ற ஒருவர் தமிழர்களின் அகிம்சை போராட்டத்தை வழி நடத்தத் தேவைப்படுகின்றார்.

ஆனால் அதுதான் ஈடு செய்யப்பட முடியாத தமிழரின் தகைமையின்மையாக இன்று இருக்கின்றது. அத்தகைய ஓர் அஹிம்சைப் போராளியை - அறநெறி வல்லாளனை - காந்தீயத் தளபதியை - இன்று தமிழினம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

தந்தை வழியில் தமிழினத்தை ஓர்மத்தோடு வழிநடத்தக் கூடிய ஒருவரே தமிழினத்திற்கு இன்று தேவை. ஆனால் அப்படி ஒரு வழிகாட்டி கிட்டுவார் என்பதற்கான ஒளிக் கீற்றுக் கூட இன்னும் தென்படவில்லை என்பதுதான் நமது துரதிஷ்டமாகும்.

# வாக்குறுதியளித்தபடி ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும்: அமித் ஷா



முன்னர் உறுதியளித்தபடி ஜம்மு–காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், அதற்கான காலக்கெடு குறித்து அவர் தெரிவிக்கவில்லை.

இதுதொடர்பில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமித் ஷா,

"ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து மீண்டும் வழங்கப்படும் என்று நாங்கள் உறுதியளித்துள்ளோம். ஆரம்பத்திலிருந்தே, மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று நாங்கள் கூறி வருகிறோம். ஆனால் அது எப்போது என்பதை பொது மன்றத்தில் வெளியிட முடியாது.

மோடி அரசாங்கத்தின் கீழ், ஜம்மு காஷ்மீரில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு எந்த இடத்திலும் மறு வாக்குப்பதிவு இல்லாத முதல் தேர்தல் நடந்துள்ளது. ஒரு கண்ணீர் புகை குண்டு வீச்சோ அல்லது ஒரு துப்பாக்கிச் சூடோ இல்லை. 60 வீத மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தினர். இது ஒரு பெரிய மாற்றம்." என்று தெரிவித்தார்.

வக்பு சட்டத் திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமித் ஷா, "சுதந்திரப் போராட்ட வீரர் சந்திரசேகர் ஆசாத் இறந்த இடத்தை வக்பு தனது சொத்தாகக் கருதுகிறது. நாடாளுமன்றத்தையும், குடியரசுத் தலைவர் மாளிகையையும் வக்பு தனது சொத்தாகக் கருதுகிறது. மக்களை திருப்திப்படுத்தும் முயற்சியில், காங்கிரஸ் ஒரு வக்பு சட்டத்தை உருவாக்கியது. அதை நீதிமன்றத்தில் கூட சவால் செய்ய முடியாது. மோடி அரசு அதை அரசியலமைப்பின் வரம்பிற்குள் கொண்டு வருகிறது" என தெரிவித்தார்.

மேலும் அவர், "தி.மு.க. தனது ஊழலை மறைக்கவும், வரவிருக்கும் தேர்தலில் உடனடி தோல்வியை தடுக்கவும் மட்டுமே மொழி மற்றும் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை எழுப்புகிறது. தொகுதி மறுசீரமைப்பு செய்வதால் யாருக்கும் எந்த அநீதியும் ஏற்படாது என பிரதமர் மோடி அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்" என தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நிலை: ஜெய்சங்கர் கருத்துக்கு சசி தரூர் ஆதரவு

பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நிலை குறித்து நாடாளுமன்றத்தில் வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் கூறிய கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்.பி.சசி தரூர், அங்குள்ள சிறுபான்மையினரின் நிலைமை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையினரின் நிலை தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிக்கை அளித்தார். இந்நிலையில், நாடாளுமன்றத்தில் ஜெய்சங்கர் தெரிவித்த கருத்துக்கு காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள சசி தரூர்,

"பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினரின் நல்வாழ்வு குறித்து நாம் கவலைப்படுகிறோம் என்பதற்கான தெளிவான சமிக்ஞை இது. மற்றொரு பிரச்சினை என்னவென்றால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நேரடி உரையாடல் எதுவும் நடக்கவில்லை. நடந்திருந்தால், நாம் நமது கவலைகளை நேரடியாகத் தெரிவித்து தீர்வு காண முயலலாம். அமைச்சரின் அறிக்கை முற்றிலும் உண்மை. நமது அண்டை நாட்டில் சிறுபான்மையினரின் நிலை மிகவும் கவலை அளிப்பதாகவே உள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையினரின் நிலை தொடர்பாக உத்தரப் பிரதேசத்தின் ஷாஜஹான்பூர் பா.ஜ.க. எம்பி அருண்குமார் சாகர் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்,

"உறுப்பினர் வெளிப்படுத்திய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறேன். அவரது கேள்வியில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று, பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அட்டூழியங்களை இந்தியா கண்காணிக்கிறதா என்பது. இரண்டாவதாக, சர்வதேச அளவில் இதைப் பற்றி நாம் என்ன செய்கிறோம் என்பது பற்றியது.

முதல் பகுதிக்கு எனது பதில், ஆம். பாகிஸ்தானில் சிறுபான்மையினர் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை நாங்கள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கிறோம். உதாரணமாக, கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும், இந்து சமூகத்துக்கு எதிராக 10 அட்டூழிய வழக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றில் ஏழு கடத்தல் மற்றும் கட்டாய மதமாற்றம் தொடர்பானவை. இரண்டு, கடத்தல் தொடர்பானவை. ஒன்று ஹோலி கொண்டாடும் மாணவர்களுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கை தொடர்பானது என்பதை நான் சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.



பாகிஸ்தானில் சீக்கிய சமூகத்துக்கு எதிராக மூன்று சம்பவங்கள் நடந்துள்ளன. ஒரு வழக்கில், ஒரு சீக்கிய குடும்பம் தாக்கப்பட்டது. மற்றொரு வழக்கில், ஒரு பழைய குருத்வாராவை மீண்டும் திறந்ததால் ஒரு சீக்கிய குடும்பம் அச்சுறுத்தப்பட்டது. அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை கடத்தி மதமாற்றம் செய்ததாக வழக்கு உள்ளது.

அகமதியா சமூகத்தவர்களுக்கு எதிராக நடந்த குற்றங்கள் தொடர்பாக இரண்டு வழக்குகள் பதிவாகி உள்ளன. ஒரு வழக்கில், ஒரு மசூதிக்கு சீல் வைக்கப்பட்டது, மற்றொரு வழக்கில், 40 கல்லறைகள் தனிமைப்படுத்தப்பட்டன. ஒரு கிறிஸ்தவருக்கு எதிராக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனநிலை சரியில்லாத அவர் மீது தெய்வ நிந்தனை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் இந்தப் பிரச்சினைகளை இந்தியா கொண்டு செல்கிறது. உதாரணமாக, பெப்ரவரி மாதத்தில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ள நமது பிரதிநிதி, பாகிஸ்தானில் மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகம், சிறுபான்மையினரை துன்புறுத்துதல், ஜனநாயக மதிப்புகளை திட்டமிட்ட முறையில் சீர்குலைத்தல் ஆகியவை அரசுக் கொள்கைகளாக இருப்பதை சுட்டிக்காட்டியது. மேலும், ஐ.நா.வால் அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் பாகிஸ்தான், யாருக்கும் போதனை செய்ய முடியாது. அதற்கு பதிலாக, பாகிஸ்தான் தனது சொந்த மக்களுக்கு உண்மையான ஆட்சி மற்றும் நீதியை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்தார்.

மற்றொரு உதாரணமாக, இரண்டு வாரங்களுக்கு முன்பு ஐ.நா. பொதுச் சபையில் நமது தூதர் பாகிஸ்தானின் வெறித்தனமான மனநிலையை அடிக்கோடிட்டுக் காட்டிப் பேசியதை குறிப்பிடலாம். எனவே, பாகிஸ்தானில் சிறுபான்மையினர் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை நாங்கள் சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்கிறோம்" என தெரிவித்திருந்தார்.





# மியன்மார் நில அதிர்வில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 1,644 ஆக உயர்வடைந்தது

மியன்மார் நில அதிர்வில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,644 ஆக உயர்வடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,400 ஆக அதிகரித்துள்ளதுடன், 139 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

மியன்மாரின் நே பேய் தாவ பகுதியிலேயே அதிகளவான உயிரிழப்புகள் பதிவானதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நில அதிர்வினால் 1,500 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன், நில அதிர்வினால் பாரியளவில் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு 4 மணித்தியாலங்களுக்கு மாத்திரமே மின்சாரம் விநியோகிக்கப்படுவதாகவும், தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், நில அதிர்வினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.
















# உக்ரைன் மீது ரஷ்யா மீண்டும் ஆளில்லா விமானத் தாக்குதல்

மத்திய உக்ரைனில் உள்ள டினிப்ரோ நகரில் ரஷ்ய நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த தாக்குதலில் ஒரு உணவகம் மற்றும் பல குடியிருப்புக்களும் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவிக்கையில், ரஷ்யா ஒரே இரவில் உக்ரைனுக்குள் 170க்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்களை ஏவி, டினிப்ரோ, கீவ், சுமி, கார்கிவ் மற்றும் க்மெல்னிட்ஸ்கி பகுதிகளில் உள்ள இலக்குகளைத் தாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் இந்த தாக்குதலினால் 04 பேர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் வரையிலும் படுகாயமடைந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், கடந்த 24 மணி நேரத்தில் உக்ரைன் தனது எரிசக்தி வசதிகளைத் தாக்கியதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

உக்ரைன் பெல்கோரோட் பிராந்தியத்தில் உள்ள மின் கட்டமைப்புகளை பலமுறை தாக்கியதாகவும், சுமார் 9,000 குடியிருப்பாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.







# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்


**ஈழத்தின் முதல் பெண் சித்தர் சடையம்மாவுக்கு திருநெல்வேலி கிழக்கில் திருக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. அவருடைய திருவுருவ சிலை பிரதிஷ்டை நாளை (31) திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நாளை (31) திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.40 வரையான சுபமுகூர்த்த நன்னாளில் நடைபெறவுள்ளது.

இதன் சிறப்பம்சமாக ஈழத்தின் முதல் பெண் சித்தர் யாழ்ப்பாணத்து நல்லூர் சடையம்மா சுவாமிகளுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டு அவரது திருவுருவச்சிலை பிரதிஷ்டையும் இடம்பெற உள்ளது.

சித்தர் சடையம்மா சுவாமிகள் அவதரித்த ஊரில் 170 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

சடையம்மா சுவாமிகள், 19.08.1865 ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரத்தில் வீரகத்



கீரிமலை உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சடையம்மா சமாதி

திப்பிள்ளை – சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளாக முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். தனது 11 ஆவது வயதில் நந்தி கோத்திரத்தை சேர்ந்த கதிரேசு என்பவரைத் திருமணம் செய்து இல்லற வாழ்வை ஆரம்பித்தார். இரு பெண் பிள்ளைகளின் தாயாக விளங்கிய இவர் அப்பர் சுவாமிகளது வாக்குக்கு அமைய 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்பதற்கமைய சரியைத் தொண்டு புரிந்து



இறையாசி பெற்று வரும் நாளில், இமைப்பொழுதும் இறைநாமத்துடன் இல்லறத்தில் துறவற நிலையை பேணி காதலாகி கசிந்து கண்ணீர் மல்க ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே என்பதற்கு அமைய பக்தி யோகி ஆகிவரும் நாளில் இவரது கணவர் நோய்வாய்ப்பட, அது நீங்க நல்லூரான் வாசல் சென்று அவனையே தஞ்சம் எனக் கொண்டு அங்கேயே தங்கியிருந்து சரியைத் தொண்டாற்றினார்.

இந்தக் காலத்திலே காசி, இராமேஸ்வரம், முதலான தென்னிந்திய திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றி கங்கை, காவேரி, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கமத்தில் புனித தீர்த்தமாடி ஆன்மீக அறிவு கைவரப் பெற்று பதிஞானம், பசு ஞானம் கைவரப் பெற்று அது முதிரப்பெற்று ஞானயோகியானார். மெல்ல மெல்ல இல்லற வாழ்வை நீக்கி துறவற வாழ்வை ஏற்கும் நாளில் வாலையம்மனின் அருட்பார்வையால் யோகம் கைவரப் பெற்றார்.

வாலை என்னும் குண்டலினி யோக பயிற்சியால்தத்தம்உடலில் உள்ள தெய்வங்களை மனக் கண்ணால் கண்டார். அட்டாங்க யோகத்தில் பிரணாயமம், தியானம், சமாதி ஆகியவை கைவரப் பெற்றநிலையில்யோகம்கைவரப் பெற்ற இவர் அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் காண்பவராகி நெற்றியில் சதாசிவனையும் கழுத்திலே மகேஸ்வரனையும் நெஞ்சிலே உருத்திரனையும் உந்தியிலே விஷ்ணுவையும் மூலத்திலே பிரம்மனையும் காணும் ஆற்றல் கைவரப் பெற்றார். தியான நிலையில் இறைவன் திருவுருவை கண்டு இன்புற்றும், அருவத்தியானம் சமாதி நிலைக்கு வழி செய்யும் எனவே இது கைவரப் பெற்று தியான யோகியானார்.

இந்த நிலையில் தன் மாங்கல்யத்தை கழற்றி கணவனிடம் கையளித்து குடும்ப வாழ்வைத் துறந்து மக்கள் பணி ஆற்றத் தலைப்பட்டு சமூக நோக்கோடு நல்லூர் தேரடிமடம், கதிர்காம மடம், கீரிமலை மடம் முதலிய வற்றை ஈழத்திலும் கடல் கடந்து திருச்செந்தூர் சென்று அங்கேயும் மடம் அமைத்து பசித்தோர் முகம் பார்த்து அன்னதானப் பணி புரிந்தார்.

இவர் மனதால் நினைப்பதை அடியவர் தாமாகவே வழங்கிப் பேருதவி புரிந்தனர். பொன்னும் பொருளும் வாரி வழங்கினர். மடங்கள் அமைத்துப் பணி புரிந்தார். சுவாமி இராமகிருஷ்ணரின் பொன் மொழிக்கு ஏற்ப 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்பதை மெய்ப்பித்தார். வள்ளலார் சுவாமிகளின் திருஞானக் கோட்டம் போல உணவும் உறையுளும் வழங்கி உலமாந்தரை உய்வித்தார். நாடிவரும் அடியவர் தம் மனக் கவலைகளை நீக்கினார்.

இந்த நிலையில் அடிக்கடி தியான நிலைக்குச் சென்றுவரும் இவர் ஈழத்து சித்தர் பரம்பரையின் மூலவர் ஆகிய கடையில் சுவாமிகளிடமும் பால்குடி பாபா சுவாமிகளிடமும் தீட்சை பெற்று அவர்களையே குருவாக ஏற்று முற்றும் துறந்த ஞானி ஆகினார். இந்த நிலையில் அடிக்கடிதலைவீங்கும்.இவரின்யோகம் அடங்க தலை வீக்கம் குறையும். இந்த நிலையில் தலை முடி நீண்டு நிலத்தைத் தொடும் அளவு வளர்ந்து சென்றதால் அடியவர்கள் இவரை சடையம்மா என்று அழைத்தனர். காரைக்கால் அம்மையாரைப் போலவே பிற்காலத்தில் வெண்ணிற ஆடை தரித்து தலைவிரி கோலமாக பூமியைத் தொட்ட தலைமுடியுடன் அடியவர் பலருக்கும்

தொடர்ச்சி ▼

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்

தொடர்ச்சி ▲

அருளாசி வழங்கினார். மன ஒருமைப்பாட்டுடன் கடையிற் சுவாமியின் குருவுபதேசமாகிய 'கந்தனை மறவாதே அவனே நமது சொந்தம்' என்பதை ஏற்று முருக பக்தையாகினார். மன ஒருமைப்பாட்டின் இறுதி நிலை சமாதியாகும் இந்நிலையில் பக்குவப்பட்ட ஆன்மா பூரணத்துள் கலந்து ஒன்றாகிவிடும். இந்நிலை கைவரப்பெற்ற இவர் சித்தர் பரம்பரையுள் ஒன்றாகினார்.

இவர் தனது சித்தத்தை சிவன் பால் வைக்க ஏற்ற புண்ணிய




இடமாக கீரிமலை எனும் நகுலேஸ்வரத்தை தெரிவு செய்து அங்கு மடம் அமைத்துத் தங்கி இருந்து பணியாற்றத் தொடங்கினார். ஆன்மீக உயர் இடமாகிய இவ்விடத்திலே கடல் அலை மோதும் பிதிர்க்கடன் நிறைவேற்றும் இடம் என்பன ஒருங்கே அமைந்த சிறிய மலையிலே தங்கி சித்தர்கள், ஞானிகளின் ஆன்மீக தேடலுக்குரிய இடமாக்கினர். நந்தவனம் அமைத்தார். இப்பணியை நல்லூர் ஆலயம், நல்லூர் சட்டநாதர் ஆலயம், திருநெல்வேலி வாலையம்மன் ஆலயம் போன்றவற்றிலும் மேற்கொண்டார்.

இத்தனை சிறப்புமிக்க இவர் 1936 ஆம் ஆண்டு சுக்கிரவார அனுச சட்சத்திரமன்று தான் ஏற்கனவே கூறியபடி உச்சி வீங்கி தலை பிளந்து சமாதியானார். இவரின் சமாதியானது யோகர் சுவாமிகளின் தலைமையில் கீரிமலையில் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் கீழே உள்ள நிலக்கீழ் அறையில் சமாதி வைக்கப்பட்டது. இவரது சடையின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு கதிர்காமம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சமாதி வைக்கப்பட்டது.

இவரின் சமாதிக்கு மேலாக கிழக்கு திசை நோக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வடக்கு நோக்கி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவரது சமாதிக்கு அருகே குழந்தைவேல் சுவாமிகளது சமாதி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவரது சமாதியானது எவ்வித சேதமின்றி அப்படியே காட்சியளிக்கிறது. இவரது சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவ சிலைகள் பாதுகாப்பாக ஓரிடத்தில் இருப்பதாக அறிய முடிகின்றது. இவரது மடங்கள் இயங்க முடியாமலும், பெயர் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளன. இது சைவத் தமிழ் உலகுக்குப் பெரும் இழுக்கானது.

இந்த நிலையில் நல்லூர் சடையம்மா மடத்தில் பணியாற்றிய பௌராணிகர் சி. தம்பி ஐயாவால் 1975 ஆம் ஆண்டளவில் அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் கொட்டகை அமைத்து அவரின் பணிகளை ஆற்றி 63 மெய்யடியார் களதும் 9 தொகை அடியார்களதும் குருபூசைகளை நடத்தி வந்தார். இந்தக் கைங்கரியம் கைகூடவே, வளர்ச்சியடைந்து 2000 ஆம் ஆண்டு இந்த மடம் விஸ்தரிக்கப்பட்டு 63 அடி நீள மடம் அமைத்து சின்னத் தலைமை வாத்தியார் எனப்பட்ட ச. நடராசா வாத்தியாரால் திறந்து வைக்கப்பட்டது.

நாளொரு வண்ணமும் இந்தப் பணி வளர்ச்சியுற்று 2025 ஆம் ஆண்டில் லிங்கம் அறக்கட்டளை ஸ்தாபகரது பேருதவியால் முதன் முதலில் சடையம்மாவுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு சடையம்மாவின் சமாதி மண் எடுத்துவரப்பட்டு அதன்மீது சடையம்மா சுவாமிகளின் கருங்கல்லாலான திருவுருவச் சிலையையும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

இவரது வாழ்க்கை வரலாறு உள்ளடக்கிய சமாதிப்பாக்களை சரவணையைச் சேர்ந்த ஆ. தில்லைநாதபிள்ளை என்பவர் 1957ஆம் ஆண்டு பண்டிதர் சோ. சபாபதிப்பிள்ளையின் முகவுரையுடன் திருச்செந்தூர் ஆ. நெல்லை வடிவேற்பிள்ளையின் அணிந்துரையுடனான 60 பாக்கள் கொண்ட சிறுநூலை வெளியிட்டுள்ளார். ஆத்மஜோதி நா. முத்தையாவும் ஈழத்து சித்தரில் ஒருவராக சடையம்மாவை குறிப்பிட்டு நூல் எழுதியுள்ளார்.

இவ்விரு ஆக்கங்களையும் மற்றும் பேராசிரியர் மா. வேதநாதனுடைய ஆய்வுக் கட்டுரையையும் கலாநிதி எஸ். பத்மராஜாவுடைய கட்டுரையையும் உள்ளடக்கி கும்பாபிஷேக சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது.

இதேவேளை, முன்னாள் விரிவுரையாளர் ப. கணேசலிங்கம், பேராசிரியர் விக்னேஸ்வரி பவநேசன் முதலியோர் ஆய்வு மற்றும் நினைவுப் பேருரைகளில் சடையம்மா பற்றி குறிப்பிட்டுள்ளமையும் நோக்கத்தக்கதே.

இது தவிர மூதறிஞர் க.சி. குலரத்தினம், இவரது அற்புதங்கள் பற்றிய சிறப்பையும் தாளையடி மு. சபாரத்தினம் என்பவர் பிள்ளைப்பேறு இல்லாதவர்களுக்கு இவர் வரமளித்து பிள்ளைப் பாக்கியம் கிடைத்தமையை வைத்து 'சடையம்மா' எனும் சிறுகதையை எழுதி இருப்பதும் நோக்குதற்கு உரியன.

19 ஆம் நூற்றாண்டில் ஒரு துணிச்சலான பெண் ஆளுமையாக ஈழத்திலும் பாரதம் சென்றும் சமய, சமூகப் பணியை ஒரு பெண் தொடர்வது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. அதனை நிதர்சனமாக்கித் தனக்குக் கீழே ஒரு மடாதீனத்தையும் காரியக் கமிட்டியையும் நிறுவி பல்வேறு இடங்களிலும் நிறுவிய மடங்களை ஒருங்கிணைத்து பணியாற்றிய ஒரு பேராளுமையாக சித்துக்கள் கைவரப்பெற்ற பெண்ணாக ஆன்மீகப் பணி புரிந்தமை ஆய்வுப் புலத்திலே மதிப்பீடு செய்யப்படவேண்டிய ஒன்றாகும்.

ஈழத்துக்கும் நல்லூருக்கும் பெருமை சேர்ந்த ஒரு பெண்ணாக சைவத் தமிழ் உலகு ஏற்று அவரின் பணியை வெளிக்கொணர்ந்து அவர் வழி பயணிப்பது காலத்தின் தேவை எனலாம்.

# முல்லையில் பண்பாட்டு நடுவம் அமைக்க இந்தியாவை உரிய முறையில் அணுகுக!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. ஆலோசனை





(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைப்பது தொடர்பில் தாம் இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியுடன் பேசியுள்ளார் எனத் தெரிவித்துள்ள வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்திய துணைத்தூதுவருக்கும் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைக்கும் எண்ணம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம், இந்தியாவை உரியமுறையில் அணுகுவதன் மூலம் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைப்பதற்கான நிதி உதவியை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியுமென கூட்டுறவுப் பிரதி அமைச்சரும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஆலோசனை ஒன்றையும் வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், பண்பாட்டு நடுவம் அமைப்பது தொடர்பில் பேசப்பட்டது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இக் கூட்டத்தில் இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைப்பதற்கு பல்வேறு வழிகளிலும் முயற்சிக்கின்றோம்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் என்னோடு பேசியிருந்தார்.

இந்தப் பண்பாட்டு நடுவத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் நிறுவுவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை எடுத்து, கலாச்சார அமைச்சின் ஊடாக இதற்குரிய நிதி ஒதுக்கீட்டினைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் – என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைப்பதுதொடர்பாக இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியுள்ளேன்.

இந்தியத் துணைத்தூதுவருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கும் எண்ணமுள்ளது. அரசாங்கம் உரியவகையில் அணுகினால் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் அமைப்பதற்கு இந்தியா நிதிஉதவிகளை மேற்கொள்ளும் – என்றார்.

இதனைத்தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை உரிய தரப்பினர்களுக்கு அனுப்பிவைப்பதென

# புதுக்குடியிருப்பில் பணி நிறுத்தம் செய்யப்பட்ட கிராம சேவையாளர் ஹெரோயினுடன் சிக்கினார்



(பா.சதீசன்)

ஏற்கனவே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கிராம சேவையாளர் ஒருவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் கொண்டு சென்றபோது சந்தேக நபரை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக பொலிஸார் கைது செய்துள்ளனர் .

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளைத் தொடர்ந்து வைத்திய பரிசோதனையின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியை சேர்ந்த 38 வயதுடைய பணி இடைநிறுத்தப்பட்ட கிராம சேவையாளர் ஆவார். இவர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கிராம சேவையாளராக இருந்த போது ஐஸ் போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையான பின்னர், கிராம சேவையாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வதை முகாம்கள் தொடர்பான விசாரணைகள் நடக்கும் என்கிறார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

## வவுனியாவில் நேற்று அவர் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

பட்டலந்த வதை முகாம் மட்டுமல்ல பல வதைமுகாம்கள் இருந்தன. அவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் நாடளுமன்ற சபை முதல்வரான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா, குடியிருப்பு பகுதியில் நேற்று தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன கலந்துரையாடல் இடம்பெற்றது. வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைளை முன்னெடுப்பது, அவர்களது நடவடிக்கைகள் மற்றும் கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பாக இங்கு பேசப்பட்டது. மூன்று வருடத்திற்கு முன்னர் நடந்த வேண்டிய இந்த தேர்தலை நாம் ஆட்சிக்கு வந்தவுடனேயே நடத்துகின்றோம். அரசாங்கம் ஒவ்வொரு செயற்பாடுகளையும் கட்டம் கட்டமாகச் செய்து வருகின்றது.

அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாக செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள்தான் ஆகியுள்ளது. ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனைப் படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத் தான் செய்ய முடியும். காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கைத்தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். எமது அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தில் கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவு அதிக நிதியை நாம் வடக்கிற்கு ஒதுக்கியுள்ளோம். ஆகவே சில நடைமுறைகளை பின்பற்றித்தான் செய்ய வேண்டும். அந்த நடைமுறைகளின் பிரகாரம் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்.

பட்டலந்த போன்று பல வதை முகாம்கள் அந்தக் கலப்பகுதியில் இருந்துள்ளன. 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியல் பட்டலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. தெற்கில் ஜே.வி.பி., ஐ.தே.க. எனப் பிரிந்து இருந்தமை போன்று, வடக்கு – கிழக்கில் புலிகள், புளொட், ஈபிடிபி, ஈபிஆர்எல்எவ், ரெலோ எப் பிரிந்து செயற்பட்டு இருந்தார்கள். வதை முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதல் கட்டமாக எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் பட்டலந்த வதைமுகாம் விவாதம் ஆரம்பிக்கப்படும்.

எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது. படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# குடாமடுவெல்ல கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(உடப்பு க.மகாதேவன்)

தொடுவாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குடாமடுவெல்ல கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சடலம் கண்டெடுக்கப்பட்டதாக தொடுவாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. சடலம் சிலாபம்

மாரவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. தொடுவாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் சரியான விசாரணையின்றி விடுதலையான அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## மிகவிரைவில் என்கின்றார் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர




(கனகராசா சரவணன்)

கடந்த காலங்களில் சரியான வகையில் விசாரணைகளை மேற்கொள்ளாமல் விடுதலை செய்யப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சில நபர்களுக்கு எதிராக மிகவிரைவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நாட்டில் இடம்பெற்ற எல்லா விதமான குற்றச் செயல்கள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். - என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் நேற்று சனிக்கிழமை பழைய கச்சேரி மண்டபத்தில் பிரதி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாங்கள் யாரையும் அரசியல் ரீதியாக பழிவாங்கவில்லை. இதற்கு முன்னரே அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட அரசியல்வாதிகள் பழிவாங்கப்பட்ட வரலாறு இருக்கின்றது. 1950,60,70,80, 90 மற்றும் இரண்டாயிரத்துக்கு பிற்பட்ட காலமாக இருக்கலாம். இப்படிப்பட்ட பல்வேறு விடயங்கள் நாட்டிலே நடந்திருக்கின்றது.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்துக்கு ஒரு விடுமுறையை வழங்கி, மக்களுக்கும், எதிரகட்சிக்கும், சிறுபான்மைக்கும் எதிராக வன்முறையைக் கட்டவிழ்துவிட்டது. அப்படிப்பட்ட நாட்டிலே நாங்கள் வாழுகின்றோம்.

எனவே நாங்கள் பழிவாங்கும் எண்ணத்துடன் செயற்பட்டிருந்தோம் என்றால் எவ்வளவே வேலையை செய்திருக்கலாம். ஆனால் நாங்கள் சட்டரீதியாக ஒப்புவிக்கப்படுவதன் பிரகாரம் நாங்கள் அவர்களுக்கு எதிராக சரியான முறையில் சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

கடந்த காலங்களில் சரியான வகையில் விசாரணைகளை மேற்கொள்ளாமல் விடுதலை செய்யப்பட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கூட - குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சில நபர்களுக்கு எதிராக - மிகவிரைவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதுவும் அரசியல் பழிவாங்கல் அல்ல. பிழை செய்திருந்தால் உங்களுக்கு எதிராக அரசாங்கம் என்ற அடிப்படையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். இதற்குதான் மக்கள் எங்களுக்கு அனுமதியளித்துள்ளனர்.

பட்டலந்தை ஆணைக்குழு தொடர்பான விவாதம் இப்போதாவது வந்தது என்பது சந்தோஷமானது. சம்பவம் துக்கமான விடயமாக இருந்தாலும் அரசியல் ரீதியாக இப்போது பெரும் விவாதமாக எடுக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணிக்கு நடந்தது என்று பார்ப்பதை விட இது ஓர் உதாரணம். இந்த நாட்டில் சட்டவிரோதமான படுகொலைகள், அரச ஒடுக்கு முறைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் இருந்தன என சொல்வதற்கான ஓர் உதாரணம் இது.

இது நீண்ட ஒரு கறுப்பான யுகத்தின் ஓர் உதாரணம். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுளது. நடைபெற்ற எல்லா விடயங்கள் தொடர்பாகவும் விசாரிக்கப்படும்.

அரசாங்கத்தை பொறுப்பெடுக்கும் போது உண்மை அறியும் ஆணைக் குழுவை நியமித்து, இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுவோம் எனத் தெரிவித்தோம்.அதற்காக மக்கள் 5 வருடத்துக்கு ஆட்சியை தந்துள்ளனர். அதன் பிறகுன் மக்கள் ஆட்சியை தரப் போகின்றனர். எனவே படிப்படியாக அறிக்கை செய்யப்பட்ட விடயங்களை ஒரே தடவையில் தீர்மானிக்க முடியாது. எனவே இந்த விடயங்களைச் செய்ய 6 மாதகாலம் செல்லும்.

இந்த அடிப்படையில் உண்மையை அறியும் ஆணைக்குழு, முக்கியமாக நல்லிணக்கத்தை கட்டியொழுப்புவதற்கு சாதகமாக இருக்கும் அதேவேளை, நல்லிணக்கத்தை குலைக்கின்றதாக இருக்க முடியாது. இது ஒரு நீண்ட தூர பயணம்.

நாட்டில் ஜனநாயக ரீதியாக ஒரு பாரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளோம். இவ்வாறு எந்தவொரு நாட்டிலும் ஜனநாயக ரீதியாக மாற்றம் இடம்பெறவில்லை. அந்த அடிப்படையில் இன்று பாரிய மாற்றம் வந்துள்ளது. இருந்தபோதும் ஆங்காங்கே பழைய ஆட்சியாளர்களின் எச்சங்கள் வெளிவருவது இருக்கின்றது. இருந்த போதும் ஒட்டு மொத்தமான மக்கள் இந்த மாற்றத்தை உணர்ந்து கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் சுமை படிப்படியாக குறைந்து வருகின்றது. ஊழல் மோசடி இல்லாத கலாசாரம் மற்றும் அரசியல் கலாசாரம் இடம்பெற்றுள்ளது. கடந்த காலங்களில் அமைச்சர்கள் அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பல வாகனங்களில் பிரயாணித்தனர். அதற்கு டீசல் பெற்றோல் மக்களின் பணத்தில். ஆனால் இன்று நாங்கள் வாகனத்தைக் குறைத்து பாதுகாப்பு இல்லாமல் செய்தமையால் யாரே ஒருவருடைய சாப்பாட்டுத் தட்டில் உணவு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே எங்களால் மக்களுக்கு வரபிரசாரங்கள் இயல்பாகக் கிட்டிக் கொண்டிருக்கின்றன.

எனவே இந்த நாட்டில் இடம்பெற்ற எல்லாவிதமான குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில் நாட்டில் ஒரு குரோதத்தை வளர்க்க இடமளியோம். அந்த வகையில் எல்லோரும் வாழக்கூடிய நாட்டை உருவாக்குவோம். - என்றார்.



# யாழுக்கு தடையற்ற மின் வழங்குவோம் என அமைச்சர் உறுதி அளித்ததும் மின்வெட்டு!

## வலு சக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு ஏற்பட்ட அனுபவம்



யாழ்ப்பாணத்தில் வலு சக்தி அமைச்சர் குமார ஜயகொடி கலந்து கொண்ட கூட்டத்தில் சிறிது நேரம் மின வெட்டு ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்குவோம் என வலு சக்தி அமைச்சர் உரையாற்றி விட்டு அமர்ந்த சிறிது நேரத்தில் மின் வெட்டு ஏற்பட்டது.

தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் பொறியியலாளர்கள் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று மாலை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றபோதே இந்தச் சம்பவம் பதிவானது.

டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன உரையாற்றிக் கொண்டு இருந்தபோதே மின்தடை ஏற்பட்டது. இதனால் சிறுது நேரம் நிகழ்வில் தடங்கல் ஏற்பட்டது. அதன் பின்னர் மின்சாரம் வழமைக்கு திரும்பியது.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் இன்று மாலை மின் தடை சிறிது நேரம் ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாண அலுவலகம் உறுதிப்படுத்தியது.

இந்த நிகழ்வில் வலு சக்தி அமைச்சர் குமார ஜயகொடி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் கொடித்துவக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லலித் சமரசேகர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

# மின்சார சபையின் மின்வெட்டு என்பதை அறியாமல் ஊடகவியலாளர்களின் மீது சீறி விழுந்த யாழ். எம்.பி.!

இலங்கையின் வலுசக்தி அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்தில் மின்சாரம் தடைப்பட்டமை தொடர்பில் உடனடியாகவே சமூக ஊடகங்கள் ஊடாக செய்தியை வெளிப்படுத்திய ஊடகவியலாளர் மீது சீறி விழுந்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்.

இந்தச் சம்பவம். நேற்று மாலை யாழ் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இலங்கை புத்திஜீவிகள் அமைப்பின் கலந்துரையாடல் ஒன்றின் போது இடம்பெற்றது .

இதன் பொழுது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம், வலு சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் கொடி துவக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ் மாவட்ட பொறியியலாளர்கள், பொறியியல் துறை சார் வல்லுனர்கள், பேராசிரியர்கள், கல்வியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய வலு சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தங்கு தடையின்றி 24 மணிநேர மின்சாரத்தை வழங்குவது எமது நோக்கமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

அவர் உரையாற்றி சில நிமிடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இந்நிலையில் இது தொடர்பான தகவலை சமூக ஊடகத்தில் ஊடகவியலாளர்கள் வெளியிட்டனர்.

இந்நிலையில் அதனை அறிந்த இளங்குமரன் எம்.பி. ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு விரைந்து வந்து நான் ஒன்றும் அறியாதவன் அல்லன் என்ற சாரப்பட சீறினார். அனைவரும் இணைந்து மின் ஆழியை நிறுத்தினால் மின்சாரம் இல்லாது போகும் எனத் தெரிவித்துச் சென்றார்.

ஊடகவியலாளர்கள் மின்சாரத் துண்டிப்பு தொடர்பில் மின்சார சபையுடன் தொடர்பு கொண்டே செய்தியினை உறுதிபடுத்தியிருந்தனர்.

இந்நிலையில் மீண்டும் திடீரென ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு விரைந்த இளங்குமரன் எம்.பி., மின்வெட்டை மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது, தெரியாது பேசி விட்டேன் எனக் கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்கள் "நாம் செய்தியை வெறுமனே உறுதிப்படுத்தாது வெளிப்படுத்தவில்லை . நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர். முதலில் மின்சாரசபையை கேட்டுவிட்டு ஊடகவியலாளர்களுடன் இவ்வாறு பேசியிருக்க வேண்டும்"" - எனத் தெரிவித்தனர்.

# முன்னேஸ்வரத்தில் வசந்த நவராத்திரி







(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம் – முன்னேஸ்வர ஷேத்திரம் வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னை நாதபெருமான் ஆலய வசந்தநவ ராத்தியைமுன்னிட்டு நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் பூஜைகள் நடைபெற்றன.

பிரதான குருவும் தர்ம கர்த்தாவு மாகிய பிரம்மஸ்ரீ ச.பத்மநாபக் குருக்கள் மற்றும் சக குருக்களும் கலந்து கொண்டு பூஜைகளை ஆரம்பித்து வைத்தனர். இதன் போது பல பக்த அடியார்கள் கலந்து கொண்டு முன்னை நாதஷ்வாமியின் அருளைப் பெற்றுக் கொண்டன




# கிழக்கு முஸ்லிம் பாடசாலைகளுக்கு செவ்வாய்க்கிழமையும் விடுமுறை நாள்

(ஏ.எச்.ஹஸ்பர்)

புனித நோன்புப் பெருநாளினை முன்னிட்டு, கிழக்கு மாகாணத்தி லுள்ள அனைத்து முஸ்லிம் பாட சாலைகளுக்கும் புனித நோன்புப் பெருநாள் விடுமுறை தினமான 31 ஆம் திகதிக்கு மறுநாள் செவ்வாய் கிழமை (ஏப்ரல் முதலாம் திகதி) விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் பேரா சிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அறி வித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை ஊடகங்களுக்கு நேற்றுப் ஆளுனரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.



ආණ්ඩුකාර කාර්යාලය - නැගෙනහිර පළාත

ஆளுநர் செயலகம் - கிழக்கு மாகாணம்

Office of the Governor- Eastern Province

திகதி - 2025.03.29

ஊடக அறிவிப்பு.

புனித நோன்புப் பெருநாளினை முன்னிட்டு, கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் புனித நோன்புப் பெருநாள் விடுமுறை தினமான 31.03.2025 ஆம் திகதிக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை (01.04.2025) விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர அவர்கள் அறிவித்துள்ளார்.

அதற்கான பதில் பாடசாலையானது 05.04.2025 சனிக்கிழமை நடைபெறும் எனவும் அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறுமெனவும் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆளுநரின் ஊடகப் பிரிவு.

கிழக்கு மாகாணம்.

அதற்கான பதில் பாடசாலையா னது 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறுமெனவும் அவர் தெரி யப்படுத்தியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.03.2025




இன்று வெற்றிகரமான பலன்கள் காண உறுதியும் திட்டமிடலும் அவசியம். பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும் நீங்கள் உற்சாகமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. கவனக்குறைவு காரணமாக பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சி நிலவும். ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட தேவையற்ற தீய உணர்வுகளை தவிர்க்கவும்.

இன்று வாய்ப்புக்கள் குறைந்து காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்படும் என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் பணிகளை எந்த இடையூறும் இல்லாமல் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாக பேசுவீர்கள்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். சேமிப்பு நிலை சிறப்பக இருக்கும். இதனால் நிதியில் ஸ்திரத் தன்மை காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் பூர்த்தியாகலாம் நீங்கள் சமநிலையோடு காணப்படுவீர்கள். அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான சூழல் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல உறவை பராமரிக்க இயலும்.

சுதந்திரமான நிதி நிலைமையும் நிதியில் ஸ்திரத் தன்மையும் காணப்படும். நீங்கள் உங்கள் நிதி நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பயணம் செய்வதில் முனைந்து இருப்பீர்கள். உங்களைச் சுற்றி மாற்றங்கள் ஏற்படுவதை உணர்வீர்கள்.மற்றவர்களுடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது சிறந்த பலன் தரும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.படைப்பாற்றல், புதுமையான திறமை மற்றும் திட்டமிடல் மூலம் நீங்கள் பணியை சிறப்பாக செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் சமநிலையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உறவில் திருப்தியை தக்க வைக்க நீங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.




இன்று நற்பலன் காண நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் பயனுள்ளதாக இருக்கும். இறை மந்திரம் மற்றும் ஸ்லோகங்கள் கூறுவதன் மூலம் நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்வதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் மனதில் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். அதனால் உங்கள் துணையுடன் நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் நம்பிக்கையான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பணத்தை கையாளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். பணத்தை செலவு செய்யும் போது அதிக செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று நீங்கள் அதிக முயற்சி எடுப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் சாதகமான சூழ்நிலைகள் காணப்படும். இதனால் நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள். கடினமான பணிகளையும் திட்டமிட்டு எளிமையாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணவரவு நிலையாகவும் அதிக அளவிலும் காணப்படும். இன்று நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். அதன் மூலம் திருப்தி காண்பீர்கள்.




இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். மறக்கமுடியாத தருணங்களை அனுபவிப்பீர்கள். சவாலான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். நீங்கள் கடினமான பணிகளையும் எளிமையாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் நெருங்கிய நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் நீங்கள் இருவரும் நெருக்கமாவீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இது உங்கள் எதிர்காலத்திற்கு உதவும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று உங்கள் செயல்களில் கவனம் கொள்ள வேண்டிய நாள். உணர்ச்சிவசப்படுவதலை தவிர்க்க வேண்டும். செயல்களை திட்டமிட்டு மேற்கொண்டால் வெற்றி பெறலாம்.

நீங்கள் சக பணியாளர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். பொறுமையுடன் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு காணப்படும். இது புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் செய்ய நேரும். அதனால் நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.03.2025




இன்று சவால்கள் நிறைந்து காணப்படுவதால் சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் வழக்கமான பணிகளை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியாக இருப்பதன் மூலம் நன்மை பெறலாம்.

பணியின்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையை சமாளிக்க பொறுமை அவசியம். சக பணியாளர்களுடன் அமைதியான முறையில் உறவாட வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைத்துக் கொள்ள நட்பான அணுகுமுறை தேவை. உறவில் நல்லிணக்கம் ஏற்பட இருவரும் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க வேண்டும்.




இன்று பதற்றமான மன நிலையில் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைப்பது கடினம். உங்கள் அன்றாட செயல்களை மேற்கொள்ளும்போது கவனம் தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக காணப்படும். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவதங்கள் ஏற்படும். இது உறவில் மகிழ்ச்சியையும் அமைதியையும் பாதிக்கும்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று உங்களுக்கு சீரான பலன்கள் கிடைக்கும் நாள்.இன்று நீங்கள் புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர்வீர்கள். இன்று சுப நிகழ்சிகள் நடப்பதற்கான சாத்தியம் உள்ளது.

பணியைப் பொறுத்தவரை முன்னேற்றகரமான பலனுக்கு சாத்தியம் உள்ளது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

நண்பரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் இனிமையாக இருக்கும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். சேமிப்பு நிலை உயர்வதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்த நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். எல்லா விஷயங்களிலும் பொறுமை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியில் கவனக்குறைவு ஏற்படலாம். எனவே நீங்கள் மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடப்பதும் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வதும் நல்லுறவை வளர்க்க உதவும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்களால் முடிந்த அளவு சேமிக்க வேண்டும்.

அதிக பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக இருப்பதும் பிரார்த்தனை மேற்கொள்வதும் சிறந்த பலன் தரும்.


## தந்தை செல்வா - 127 ஆவது ஜெயந்தி -2025

## அழைப்பிதழ்

ஈழத்துக்காந்தி மூதறிஞர் சா.ஜே.வே. செல்வநாயகம் QC அவர்களின் 127வது ஜெயந்தி நிகழ்வு இவ்வாண்டு கிளிநொச்சி மாநகரில்...



**தலைமை**
கௌரவ உயர்திரு நாகலிங்கம் வேதநாயகன்
(ஆளுநர் வடமாகாணம், அறங்காவலர் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை)

**பிரதம அதிதி • நினைவுப் பேருரை**
கௌரவ ஸ்ரீமான் ஆ. நடராஜன்
மேனாள் இந்தியத் துணைத் தூதுவர், யாழ்ப்பாணம்
மேனாள் இந்திய உதவித் தூதுவர், கண்டி

**முன்னிலை**
கௌரவ ஸ்ரீமான் சாய் முரளி
இந்தியத் துணைத் தூதுவர், யாழ்ப்பாணம்.

**சிறப்புரைகள்**
கலாநிதி இராமசாமி ரமேஸ்
(சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
சட்டமாணி, ஜனாப் முஜிபுர் ரஹ்மான் LLB
சட்டத்தரணி, புராதனி சிவலிங்கம், MHR, B.A (Col)

காலம் :- 30.03.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை 09.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 வரை
இடம் :- கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை

தொடர்புகளுக்கு: 077 207 8384, 077 403 3471

## நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கு ஏற்றல்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்

**தலைமையுரை**
கௌரவ உயர்திரு நாகலிங்கம் வேதநாயகன்
(ஆளுநர் வடமாகாணம், அறங்காவலர் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை)

**சிறப்புரைகள்**
கலாநிதி இராமசாமி ரமேஸ்
(சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
"சமகால அரசியலும் சிறுபான்மை மக்களும்"
சட்டமாணி, ஜனாப் முஜிபுர் ரஹ்மான் LLB
"தந்தை செல்வாவின் பணியில் முஸ்லிம்களின் பங்களிப்பும் அதன் வெளிப்பாடும்"
சட்டத்தரணி, புராதனி சிவலிங்கம், MHR, B.A (Col)
"தந்தை செல்வா சட்டத்துறையில் ஓர் சுடர் விளக்கு"

**கௌரவிப்பு**
கலாபூஷணம் இரா.சுப்பிரமணியம்
சமாதான நீதவான்

**நினைவுப்பேருரை**
கௌரவ ஸ்ரீமான் ஆ. நடராஜன்
மேனாள் இந்தியத் துணைத் தூதுவர், யாழ்ப்பாணம்
மேனாள் இந்திய உதவித் தூதுவர், கண்டி

**நன்றியுரை**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை | CHELVANAYAKAM MEMORIAL TRUST